## அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 600 006

## மேல்நிலை இரண்டாமாண்டு துணைத் தேர்வு, ஜூன் / ஜூலை 2023 விடைத்தாட்களின் நகலினை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளல் மற்றும் மறுகூட்டல்-II அல்லது மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பித்தல்

## செய்திக் குறிப்பு

ஜூன் / ஜூலை 2023, மேல்நிலை இரண்டாம் ஆண்டு துணைத் தேர்வு எழுதி விடைத்தாள் நகல் கோரி விண்ணப்பித்த மாணவர்களின் விடைத்தாள் நகலினை 09.08.2023 (**புதன்கிழமை**) **பிற்பகல்** முதல் www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று Notification-ஐ Click செய்தவுடன் HSE Second Year Exam, JUNE/JULY- 2023 - Scan Copy Download" என்ற வாசகத்தினை "Click" செய்தால் தோன்றும் பக்கத்தில் தங்களது பதிவெண் மற்றும் பிறந்த தேதியினைப் பதிவு செய்து தாங்கள் விண்ணப்பித்த பாடங்களுக்குரிய விடைத்தாள்களின் நகலினைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

விடைத்தாள்களின் நகலினை பதிவிறக்கம் செய்த பிறகு **மறுகூட்டல் –II அல்லது மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க விரும்பினால்**, இதே இணையதள முகவரியில் "Application for Retotalling / Revaluation" என்ற தலைப்பினை Click செய்து வெற்று விண்ணப்பத்தினைப் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.

தேர்வர்கள் மேற்படி பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து, அதனை 10.08.2023 (**-வியாழக்கிழமை**) **முற்பகல் 11.00 மணி முதல் 12.08.2023 (சனிக்கிழமை) வரையிலான நாட்களில் மாலை 5.00 மணிக்குள்** சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்திலும், . புதிதாக தோற்றுவிக்கப்பட்ட மாவட்டங்களில் (தென்காசி, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், இராணிப்பேட்டை, மயிலாடுதுறை, செங்கல்பட்டு) முதன்மைக்கல்வி அலுவலர்

--2--

அலுவலகத்திலும் ஒப்படைக்க வேண்டும். மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீட்டிற்கான கட்டணத்தினை மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்/ முதன்மைக்கல்வி அலுவலர் அலுவலகத்தில் பணமாகச் செலுத்த வேண்டும்.

**<u>மறுமதிப்பீடு</u>**

பாடம் (ஒவ்வொன்றிற்கும்) - ரூ. 505/-

**<u>மறுகூட்டல்-II</u>**

உயிரியல் பாடம் மட்டும் - ரூ.305/-

ஏனையப் பாடங்கள் (ஒவ்வொன்றிற்கும்) - ரூ.205/-

ஒம்/-

இயக்குநர்

நாள் : 08.08.2023

இடம் : சென்னை – 600 006.